# சி.ஏ.ஏ. - நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன...?

சி.ஏ.ஏ., குடியுரிமை திருத்த சட்டம் என்பது பற்றி கடந்த சில நாட்களாக ஊடகங்களிலும், பொதுமேடைகளிலும் பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்டு வருவதற்கு முக்கிய காரணம் 2019ல் நிறைவேற்றப்பட் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கானவிதிமுறைகள் (Rules) அரசிதழில் இப்போது நாடாளுமன்ற தேர்தலையொட்டி வெளியிடப்பட்டதே!

நிலவுகின்ற சில குழப்பங்களை தவிர்ப்பதற்காகவும் இது குறித்து மக்கள் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தினாலும் நாடாளுமன்றத்தில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டபோது நடந்தவைகளை விளக்க வேண்டியது அவசியமாகின்றது!

முதலில் குடியுரிமை என்றால் என்ன? ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடியுரிமை பெற்றவருக்கு அந்நாட்டில் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பொது என்று சொல்லக்கூடிய அனைத்து உரிமைகளும் கிடைக்கும். எழுத்துரிமை, பேச்சுரிமை, தேர்தலில் வாக்களிக்கின்ற , இராணுவத்தில் பணியாற்றுகின்ற உரிமைகளோடு சொத்துரிமையும் உண்டு. சுருக்கமாக சொன்னால் அரசியல் சட்டம் தரும் அனைத்து உரிமைகளும் , பாதுகாப்பும் வெளிநாடு செல்லும்போதும் கிடைக்கும். ஆதார் அட்டை, வெறும் இருப்பிட அடையாள அட்டை மட்டுமே ... அதுபோல பான் கார்டும் குடியுரிமைக்கான சான்று இல்லை என நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. குடியுரிமை இல்லாதோருடைய நிலை எத்தனை துயரம் நிறைந்தது என்பது விவரிக்க இயலாத ஒன்று. உரிமைகள் இல்லாத வாழ்க்கை என்பது கை, கால்கள் இருந்தும் செயலற்ற நிலையில் இருப்பது போன்றதே! இவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல நேர்ந்தால் ஒரு குற்றவாளியை விட இரக்கமற்ற முறையிலேயே நடத்தப்படுவார்கள்.

இப்படி குடியுரிமை இல்லாத 60000 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் திருச்சி, கன்னியாகுமரி, திருவண்ணாமலை போன்ற ஊர்களில் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கழக ஆட்சி ஆறாவது முறையாக தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மலர்ந்ததற்குப் பின் இவர்களுக்குப் பல சலுகைகளும் பாதுகாப்பும் தரப்பட்டிருப்பதோடு குடியுரிமை பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

நம்முடைய நாடு 1950 ல் குடியரசாக ஆனதற்குப் பின்னால் 1955ல் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட குடியுரிமை சட்டம் அதற்குப் பின் 1986, 1992, 2003, 2005, 2015, 2019 என ஆறு முறை திருத்தப்பட்டிருக்கின்றது.

இப்போது நாம் அவசியத்தின் பொருட்டு பேச வேண்டியது 2019 சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டுமே! இந்த திருத்தத்தின் நோக்கம் நமக்கு அண்டை நாடுகளாக இருக்கின்ற பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஃப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மதரீதியாக துன்புறுத்தப் பட்டு ( Religiously persecuted ) 2014 க்கு முன் வரை வந்து குடியேறிய இந்துக்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், பார்சிக்கள், புத்த மற்றும் ஜைன என ஆறு மதங்களை சார்ந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது என்பதே!

மேலோட்டமாக பார்க்கிறபோது இது மனிதாபிமான மிக்க ஒரு நடவடிக்கையாக தெரிந்தாலும் இதில் இஸ்லாமியர்கள் என்ற ஒரு முக்கியமான பிரிவினர் விடுபட்டிருப்பது தெரியும். பாரதிய ஜனதாவினுடைய உள்நோக்கம் வெளிப்படையாக இந்த சட்ட திருத்தத்தின் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது: மத சார்பற்ற நாடாகிய இந்தியாவில் தாங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதாக நாடு முழுவதும் முஸ்லீம்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். டெல்லி ஜும்மா மஸ்ஜித் பகுதியில் வரலாறு காணாத அளவில் இஸ்லாமிய பெண்மணிகள் பல்லாயிரக்கணக்கில் இந்த போராட்டத்தில் வீட்டிற்கு கூட செல்லாமல் இரவு பகலாக ஈடுபட்டது பெரும் பரபரப்பை உருவாக்கியது! (கொரோனா பெருந்தொற்று தீவிரமான காரணத்தினாலேயே அந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தது தீர்வு எதுவும் எட்டாமலே)

மக்களவையில் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் ஆளுங்கட்சி எளிதாக அந்த மசோதாவை அங்கு நிறைவேற்றியதற்குப் பின்னால் 11.12.2019 மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அனைத்து எதிர்க் கட்சிகளும் இந்த சட்ட திருத்தம் முஸ்லீம்களை புறக்கணிப்பதை சுட்டிக்காட்டி கடுமையாக எதிர்த்து உரையாற்றினார்கள். கழகத்தின் சார்பில் இந்த விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசினேன்.

“1947 ல் நாடு விடுதலை அடைந்தபோது இந்தியா, பாகிஸ்தான் என பிரிவினை ஏற்பட்ட நேரத்தில் முகமது அலி ஜின்னா நான் இஸ்லாமியர்களுக்கென நாடொன்று கண்டிருக்கிறேன் , முஸ்லீம்கள் என்னோடு வாருங்கள் என்று அழைப்பு விடுத்த நேரத்தில் இங்கிருந்த முஸ்லீம்கள் நாங்கள் இஸ்லாமியர்கள்தான். ஆனால் இந்தியாதான் எங்கள் நாடு என்று இங்கேயே தங்கி நம்மோடு சகோதரர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே! அவர்களுக்கு நாம் செய்யும் கைமாறு இதுதானா?” என்று நான் உணர்ச்சி பொங்க கேட்டதற்கு பாராமுகமும் , கேளா காதும் , கேலி சிரிப்பும்தான் ஆளும் தரப்பிலிருந்து கிடைத்தது. எதிர் கட்சிகளின் வாதத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து ஏற்கிற கட்சியல்லவே பா.ஜ.க.! என்றால் இப்படி ஒரு பாரபட்சமான அணுகுமுறையை மேற்கொண்டிருக்க மாட்டார்களே!

மசோதாவை தோற்கடிக்க முயன்றால் இந்த சட்ட திருத்தத்தின் மூலம் பயன் பெறக் கூடிய ஆறு மதத்தை சார்ந்தவர்களின் எதிர்ப்பைப் பெற வேண்டியதிருக்கும். நமக்கு தேவை இஸ்லாமியர்களுக்கும் இந்த சலுகை கிட்டிட வேண்டுமென்பதே ! அத்தோடு தமிழ்நாட்டை சார்ந்த நாம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கை தமிழர்களுக்கும் குடியுரிமை பெறுவதற்கான நல்லதோர் வாய்ப்பு! ஆக தீர்வுக்கு எங்களுக்கு இருந்த வழி மசோதாவில் திருத்தங்கள் கொண்டு வருவதுதான்!

இதில் ஒரு பிரச்சினை என்னவென்றால் இலங்கைத் தமிழர்கள் மதரீதியாக துன்புறுத்தப்பட்டு இந்தியாவிற்கு வரவில்லை என்ற வாதம் எடுத்து வைக்கப்படும். இதை மனதில் கொண்டு மிகுந்த சிரத்தை மேற்கொண்டு, ஆழ்ந்த கவனத்தோடு தி.மு.க.வின் உறுப்பினர் என்ற வகையில் நான் மூன்று திருத்தங்களை முன் வைத்தேன். 1)“மதரீதியாக” துன்புறுத்தப் பட்டு என்பதோடு “இனரீதியாக” என்று சேர்க்கவும். 2) பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஃப்கானிஸ்தான் என்பதோடு “இலங்கையை” சேர்க்கவும் 3) ஆறு மதங்களோடு முஸ்லீம்களை சேர்க்கவும்.



**திருச்சி சிவா எம் பி**
மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் - கழக கொள்கை பரப்புச் செயலாளர்

இந்த திருத்தங்கள் குரல் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டதாக அவைத் தலைவர் வெங்கையா நாயுடு அறிவித்ததும் நான் மின்னணு வாக்குப் பதிவு கேட்டேன். இந்த கோரிக்கையை ஏற்று மின்னணு வாக்குப் பதிவு நடத்த அவைத் தலைவர் உத்தரவிட்டார். அன்றைக்கு மாநிலங்களவையில் கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்துதான். 1) நான் 2) ஆலந்தூர் பாரதி 3) டி கே எஸ் இளங்கோவன் 4) மு சண்முகம் 5) பி வில்சன் ஆச்சரியப்படத்தக்க அளவில் நம்முடைய திருத்தத்துக்கு ஆதரவாக 99 வாக்குகள் கிடைத்தன. அரசாங்கத்துக்கு ஆதரவாக, இந்த திருத்தங்களை எதிர்த்து 124 வாக்குகள் பதிவாயின!

வித்தியாசம் 25. அன்றைய தினம் மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை 13! அது அப்படியே பா.ஜ.க. அரசாங்கத்துக்கு ஆதரவாக விழுந்தது. அந்த 13ஐ 124 ல் கழித்தால் அரசுக்கு ஆதரவு 111. அந்த வாக்குகள் திருத்தத்திற்கு ஆதரவாக அளித்திருந்தால் 112 பெற்று மிக எளிதாக நாட்டில் பெரிய போராட்டங்கள், கொந்தளிப்புகள் இல்லாமல் முஸ்லீம்களும், 60000 இலங்கைத் தமிழர்களும் குடியுரிமை பெற்றிருப்பார்கள். மசோதாவும் நிறைவேறியிருக்கும். நம்முடைய நீண்ட கால கோரிக்கையான இலங்கை தமிழர்கள் குடியுரிமை பிரச்சினையும் தீர்ந்திருக்கும். இன்றைக்கு இந்திய நாடு தங்களை அங்கீகரிக்கவில்லையே என குமுறி கொந்தளித்து வேதனையில் வெந்து கொண்டிருக்கும் இஸ்லாமியர்களும் ஆறுதலடைந்து நிம்மதி பெருமூச்சு விட்டு கொண்டிருந்திருப்பார்கள்! மதவாத பா.ஜ.க.வின் பாரபட்சமான செயலுக்கு துணை நின்று கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பினை கெடுத்து இலங்கைத் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மிகப் பெரிய பாதகத்தை செய்த அ.தி.மு.க.வின் துரோகம் எந்த காலத்திலும் மன்னிக்க முடியாதது!

நாடாளுமன்ற தேர்தல் நேரத்தில் கூட்டணியை விட்டு வெளியேறி வந்து சத்தியவான் வேடம் போடும் அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் என்று கூறிக் கொள்ளும் எடப்பாடி பழனிசாமிதான் பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த மக்கள் விரோத, மாநில உரிமைகளைப் பறிக்கின்ற எல்லா சட்டங்களுக்கும் நேற்று வரை ஆதரவு தந்து தமிழ்நாட்டுக்கும் சிறுபான்மையினருக்கும் எந்த காலத்திலும் மன்னிக்க முடியாத பாதகம் செய்தவர்!



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்த முதல்வருக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நன்றி தெரிவித்தார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர் மன்றத்தலைவர் சே.முத்துதுரை ஆகியோர்.நன்றி தெரிவித்தார்கள்.

### நாட்டின் அமைதி - நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்! ஒன்றிய இணை அமைச்சர் ஷோபா மீது

# தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 21–**

**நாட்டின் அமைதி – நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றிய இணை அமைச்சர் ஷோபா மீது தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.**

அவரது அறிக்கை வருமாறு :

பெங்களூரு ராமேஸ்வரம் கபே குண்டுவெடிப்பு வழக்கில் தமிழர்களைத் தொடர்புபடுத்தியுள்ள ஒன்றிய பா.ஜ.க. இணையமைச்சர் ஷோபா கரந்த்லஜே அவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேசுவதற்கு அவர் ஒன்று, என்.ஐ.ஏ அதிகாரியாக இருக்கவேண்டும், அல்லது இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்வுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருக்க வேண்டும். கண்டிப்பாக இப்படிப் பேச அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. தமிழர்களோடு கன்னடர்களும் பா.ஜ.க.வின் இந்த பிளவுவாதப் பேச்சை நிராகரிப்பார்கள்.

நாட்டின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்ததற்காக ஷோபா மீது தக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்.

பிரதமரில் இருந்து தொண்டர்கள் வரை பா.ஜ.க.வில் இருக்கும் அனைவரும் இத்தகைய அசிங்கமான, பிரிவினை அரசியலை உடனே நிறுத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் ஷோபாவின் வெறுப்புப் பேச்சைக் கவனித்து அவர் மீது உடனடியாகக் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தூத்துக்குடி அல்ல; எங்கே போட்டியிட்டாலும்

# தமிழிசை சௌந்தரராஜன் டெபாசிட் வாங்க போராட வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, மார்ச் 21-

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக அரசியல் கட்சியில் செய்து வருகின்றனர் . இந்த நிலையில் காங்கிரஸ் சார்பில் சிவகங்கை நாடாளுமன்ற தொகுதிக்கு மீண்டும் தற்போதைய எம்.பி. ஆக உள்ள கார்த்தி சிதம்பரம் போட்டியிட வாய்ப்பு அதிகம் உள்ளது.

இந்த நிலையில் புதுக்கோட்டையில் சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதியை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்தினார். இதன் பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் கார்த்தி சிதம்பரம் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில், தமிழிசை சௌந்தரராஜன் தூத்துக்குடி அல்ல எங்கே போட்டியிட்டாலும் டெபாசிட் வாங்க போராட வேண்டி இருக்கும்,

ஆளுநர் ஆர்.என். ரவி தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு பீகாரில் நிதீஷ் குமாருக்கு போட்டியாக தேர்தலில் போட்டியிட போவதாகவும் தகவல் வந்துள்ளது,

அந்த செய்தி உண்மையாக வரும் பட்சத்தில் நல்ல மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும். நாங்கள் முன்னாள் ஜெயலலிதாவை அரசியல் ரீதியாக தான் விமர்சனம் செய்துள்ளோமே தவிர, தனிப்பட்ட முறையில் நாங்கள் விமர்சனம் செய்து இழிவுபடுத்தவில்லை, ஜெயலலிதாவை யார் இழிவுபடுத்தினார்கள் என்பது அவர்களுக்கு தெரியும், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் இரண்டாவது இடத்திற்காக பா.ஜ.க., அ.தி.மு.க. என யார் வேண்டுமானாலும் போட்டி போட்டுக் கொள்ளட்டும். ஆனால் இரண்டாவது இடத்தில் ஒரு திராவிட கட்சி வந்தால் நல்லது என்று நாங்கள் நினைக்கிறோம்,

அ.தி.மு.க.வின் நிலையை தற்போது காணும்போது பரிதாபமாக உள்ளது,

பிரதமர் மோடி தமிழகத்திற்கு வருவதால் எங்களுக்கு தூக்கம் நிம்மதியாக வருகிறது. நாங்கள் தூக்கத்தை இழந்து தவிக்கவில்லை

யாரைக் கண்டும் பயப்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு கிடையாது.

அவர் தான் தூக்கத்தை இழந்து தவித்து தமிழகத்திற்கு அடிக்கடி வந்து கொண்டுள்ளார். எத்தனை முறை பிரதமர் மோடி தமிழகத்திற்கு வந்தாலும் தாமரைக்கு தமிழகத்தில் வேலை இல்லை. தமிழகத்தில் உள்ள 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்பது உறுதி. நாங்கள் யாரும் ஜெயலலிதாவை இழிவு படுத்தவில்லை. அவர் என்னென்ன இழிவு படுத்தினார் என்பதை பிரதமர் உணர்ந்து கொள்ள வேண்டும்.



அரசியல் ரீதியாக யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை நாங்கள் எதிர்த்து கொண்டு தான் உள்ளோம். கட்சி ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் தான் நாங்கள் அவரை எதிர்த்தோம்

சிஏஏ சட்டம் நிறைவேறுவதற்கு காரணம் அ.தி.மு.க. தான். அதை கொண்டு வருவதற்கு காரணமும் அதிமுக தான். மகளிர் உரிமை திட்டம் தொடர்பாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பூ ஆகியோர் தெரிவித்த கருத்துக்களால் பெண்கள் கொதித்து எழுந்துள்ளனர். தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக வாக்குகளை அளித்து சரியான பதிலடி கொடுப்பார்கள்.

இந்த நிலைமை வரை தி.மு.க. பா.ஜ.க. இடையே தான் போட்டி என்ற நிலை இல்லை. எங்களுடைய கூட்டணி வளமான கூட்டணியாக இருக்கும் என்று எடப்பாடி சவால் விட்டார். ஆனால் இன்று கூட்டணிக்கு ஆள் கிடைக்காமல் வேலுமணியும் தங்கமணியும் திண்டாடி வருகின்றனர். அப்போது இருந்த அதிமுக வேற, இப்போது உள்ள அதிமுக வேற, இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கார்த்தி சிதம்பரம்

பா.ஜ.க. வாரிசு அரசியல், வாரிசு அரசியல் என்று எங்களை கூறிவிட்டு தற்போது மேடையில் பிரதமர் மோடியுடன் வாரிசு அரசியல் காரராக தான் இருந்தனர். அவர்களோடு சேர்ந்தால் புனிதர்கள். அவர்களை எதிர்த்தால் ஊழல்வாதிகள் என்று பா.ஜ.க.வினர் கூறி வருகின்றனர் என்று பேட்டியளித்தனர்.



நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி நாளை (22ஆம் தேதி) திருச்சிசிறுகனூரில் நடைபெறவிருக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெரம்பலூர் மற்றும் திருச்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்து சிறப்புரையாற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பதையொட்டி பொதுக்கூட்ட ஏற்பாடுகளை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு ஆய்வு செய்தார். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், பெரம்பலூர் எம்.எல்.ஏ. பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் இளங்கோவன், சமயபுரம் ராஜசேகர், லட்சுமணன் ஸ்ரீதர், கிராப்பட்டி செல்வம், மண்டி சேகர், செல்வம் ம.தி.மு.க. வெல்லமண்டி சண்முகம், சீனிவாச பெருமாள், கமல் முஸ்தபா, காங்கிரஸ் கலை, உத்தமர் சீவி ராஜேந்திரன் உட்பட பலர் உடன் சென்றனர்.